4001

Register Number | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV-க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $8 \times 2 = 16$

1. திரு. வி. க. அவர்கள் படைத்த நூல்களுள் நான்கினைக் கூறுக.
2. எவ்விடத்தில் சினத்தைக் காத்தல் வேண்டும் ?
3. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று நீதிகளைக் குறிப்பிடுக.
4. கொலை மாக்கள் இயேசுவை எங்ஙனம் நிறுத்தினர் ?
5. பாடாண் திணை - விளக்குக.
6. குறவஞ்சிப் பாடலில் குறிப்பிடப் பெற்றுள்ள மலைகளுள் நான்கினைக் கூறுக.
7. பாரத நாட்டுக்கு எல்லைகளாக அமைந்து காத்திடுவன யாவை ?
8. பிளந்தார், அளந்தார் எவற்றை ?
9. புத்தர், எதை மொழிந்தார் ? எதற்கு உழந்தார் ?
10. சீறாப்புராணம் எழுதி முடிக்க உமறுப் புலவருக்கு உதவியவர்கள் யார் ? யார் ?

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

11. புகழின் சிறப்பினைக் கூறுக.

12. தமிழின் சிறப்புகளைக் கூறுக.

13. ஊராண்மைக்குரிய செல்வங்கள் யாவை ?

14. இவள் சீதைதான் என அனுமன் துணிந்த முறையை விளக்கி எழுதுக.

15. பாண்டியன் நன்மாறனின் சிறப்புகளாகச் சீத்தலைச் சாத்தனார் கூறுவன யாவை ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : 1 × 7 = 7

16. இடனறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து தருக.

17. கொடியவர்களின் தீச் செயல்களையும், இயேசு நாதரின் அருள் திறனையும் தொகுத்தெழுதுக.

18. கடல் பற்றிக் கவிஞர் வள்ளத்தோள் கூறுவன யாவை ?

19. குறத்தி கூறும் குற்றால மலைவளத்தைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : 2 + 2 + 3 + 3 = 10

20. 'ஈதல்' எனத் தொடங்கும் குறளையும், 'விடும்' என முடியும் குறளையும் எழுதுக.

21. அ) 'கலையென்ற' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக. ( 4 அடிகள் மட்டும் )

ஆ) 'வீடின தன்றறன்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

V. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

கட்டுதல் என்பது ..................... . ( தளை / தலை )

23. பொழில் என்பதன் பொருள் ..................... .

அ) சுனை

ஆ) மலை

இ) சோலை.

24. குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன். இத் தொடரில் ..................... அமைந்துள்ளது.

அ) மோனை

ஆ) எதுகை

இ) இயைபு.

25. புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ................ .

அ) ஜி. யு. போப்

ஆ) வீரமா முனிவர்

இ) ஹீராஸ் பாதிரியார்.

26. கலம்பக உறுப்புகள் ..................... .

அ) ஆறு

ஆ) பன்னிரண்டு

இ) பதினெட்டு.

27. கீழ்க்காணும் குறட்பாவைச் சீர்பிரித்து எழுதுக :

வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத்தனைய துயர்வு.

28. திரிகடுகம் .................... அமைந்த நூல்.

அ) வெண்பாக்களால்

ஆ) ஆசிரியப்பாக்களால்

இ) வஞ்சிப்பாக்களால்.

29. கோடிட்ட இடங்களில் சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

தாள்தோய் தடக்கை தகைமா .......... ( ன் / ண் ) வ .......... தி ( ளு / லு / ழு ).

30. பொருத்துக :

| சொல் | | பொருள் |
|---|---|---|
| அ) புயம் | – | இரவு |
| ஆ) அல் | – | வீடு |
| | – | தோள். |

31. தைத் திங்கள் குளம் பூத்த பூவோ ?

அ) நிலவு ஆ) விண்மீன்.

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 2 = 10

32. உள் வளத்திறமை என்பது என்ன ?

33. இரகுநாத சேதுபதியின் அன்பில் வளர்ந்த புலவர்கள் யாவர் ?

34. ஒவ்வொரு கூட்டத்திலும் வ.உ.சி. எடுத்துரைக்கும் குறள் எது ?

35. கொடி கட்டிப் பறந்த தீய மரபுகள் யாவை ?

36. அறிவியல் அறிஞர்கள் என்றவுடன் நம் கண்முன் நிற்போர் யாவர் ?

37. புதிதாக வீடு கட்டும்போது மனத்திற் கொள்ள வேண்டுவன எவை ?

38. வாலை வாரிதி எத்தகு சிறப்புக்கு உரியவன் ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

39. எத்தகைய எண்ணம் நாட்டை விட்டு அகலல் வேண்டுமெனத் திரு. வி. க. கூறுகிறார் ?

40. இல் வாழ்க்கை எப்படி வளர வேண்டும் என மு. வ. வாழ்த்துகிறார் ?

41. பெரியாரோடு பிறந்த இரண்டு நல்லுணர்வுகளை விளக்குக.

42. மனையியல் கல்வித் திட்டங்களில் சிறந்தவை எவை ?

43. ஔவையார் தம் வாய் யார்யாரைப் பாடியதாகக் கூறிப் பெருமைப்படுகிறார் ?

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. அனைவரும் கல்வி பெற வேண்டும் என்பதைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. எவ்வாறு விளக்குகிறார் ?

45. வ. உ. சி. அவர்களின் செய்நன்றி மறவாப் பண்பினை விளக்கி எழுதுக.

46. உமறுப் புலவர் சீறாப்புராணத்தைச் செஞ்சொற் கவிதையாக அமைத்த நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

47. 'ஔவையாரே பாஸ்கலுக்கு முன்னோடி' என்பதை விளக்குக.

IX. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

48. ஒருதுறைக்கோவை என்பது ...................... .

அ) அகத்துறை சிற்றிலக்கியம் ஆ) சிலேடை

இ) அந்தாதி ஈ) கலம்பகம்.

49. கோடிட்ட இடத்தை நிரப்புக.

எட்டப்ப மன்னரின் சபையில் தலைமைத் தமிழ்ப் புலவராய் இருந்தவர் ..................... .

50. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளைத் திருத்துக :

அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாதக் கூட்டத்தை காண்பதரிது.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் :

என்னே அவருடைய தியாகம்.

52. கபிலர் கண்ட அறிவியல் உண்மையை உணர்த்தும் கபிலர் பாடல் அமைந்த தொகுப்பு :

அ) திருவள்ளுவ மாலை

ஆ) வெண்பா மாலை

இ) பெண்மதி மாலை.

53. வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக :

வாழ்க்கையின் உயர்ந்த இன்பமே மனையியல் .................... குறிக்கோள் ( ஐ, ஆல், கு, இன் ).

54. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) குமுதவாய் ஆ) தாமரை முகம்.

55. கீழ்க்காணும் சொற்களுள் இரு பொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அதன் இருபொருளை விளக்குக.

படி, நூல், பார், கலை.

56. கீழ்க்காணும் விடை வருமாறு வினாத் தொடர் அமைக்க :

பெரியார் என்றால் ஈ. வெ. இராமசாமியைத்தான் குறிக்கும்.

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஒன்றனை விரித்து எழுதுக :

அ) இருதிணை ஆ) ஐந்திலக்கணம்.